1989 ஏப்ரல் 7]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு விளக்கம்—மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியின் அடிப்படையில் —தரவிரும்புகிறேன். சில நேரங்களில் தேர்தலை நடத்துவதாகச் சொல்லி புகைப் படங்களையெல்லாம் எடுத்துவிட்டு பிறகு 5 அல்லது 6 ஆண்டுக் காலம் தேர்தலையே நடத்தாமலேயே விட்டுவிட்டால், முகங்கள் மாறிவிடக் கூடும் என்ற அந்தப் பிரச்சினையும் ஏற்படக் கூடும். (சிரிப்பு).

ஆதிதிராவிட தனி தாசில்தார் அலுவலகம்.

42—(*வினா எண். 57) திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை-அண்ணா மாவட்டம் செய்யூர் தாலுகாவிற்கென ஆதி திராவிட தனி தாசில்தார் அலுவலகம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) செய்யூர் வட்டத்தைக் கொண்ட தனி வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் செய்யூர் தாலுக்காவை தலைமையிடமாகக் கொண்டு ஆதி திராவிடர் தனித் தாசில்தார் அலுவலகம் துவக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். மதுராந்தகம் வட்டமானது 1985-ஆம் ஆண்டில் பிரிக்கப்பட்டு, அதற்குப் பிறகு செய்யூர் வட்டம் என்று தனி வட்டம் உருவானது. தமிழகத்திலேயே பெரிய வட்டமாக அன்றைக்கு மதுராந்தகம் வட்டம் விளங்கியது. ஒரு நகராட்சியும், இரண்டு பேரூராட்சிகளும் அதோடு சுமார் 400-க்கும் மேற்பட்ட கிராமங்களையும் உள்ளடக்கிய வட்டமாக மதுராந்தகம் வட்டம் விளங்கியது. தற்போது தனித் தாலுகாவாக செய்யூர் விளங்குகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தொகுதியும் செய்யூர் வட்டத்தில்தான் வருகிறது. எனவே அதன் காரணமாக அரசு இதைப் பரிசீலனை செய்து ஆதி திராவிட மக்களுக்கு நன்மை வழங்கும் வகையில் தனி அலுவலகம் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, செங்கை—அண்ணா மாவட்டம் 12 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு 2 வட்டங்களுக்கும் ஒரு தனி வட்டாட்சியர் அலுவலகம் என்ற அமைப்பில் தற்போது இயங்கி வருகிறது. அதனால் இந்த அமைப்புக்குச் சாத்திய மில்லை என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு வேலை வாய்ப்பிலே 18 சதவீதம் முன்னுரிமை வழங்கி வருகிறார்கள். ஆனால் அதே போன்று அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படுகின்றபோது, ஆதிதிராவிட அதிகாரிகளுக்கும் 18 சதவீதம் வழங்குவதில்லை என்று அறிகிறேன். மைய அரசைப் பொறுத்தவரையில் அங்கு எந்தப் பதவி உயர்வு வழங்கும்போதும் ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவீத ஜி.ஓ.வை அமல்படுத்துகிறார்கள். அதுபோல் அவர் களுக்கு தமிழகத்திலும் அமல் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு 18 சதவீதம் என் பதை அரசு அமல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. வி. கே. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, ஆதிதிராவிடர் நலனுக்கென்று, தாசில்தார் அலுவலகத் திலேயே தனித் தாசில்தார் அலுவலகங்கள் செயல்படுவதற்கு அரசின் குறிப்பில் ஏதாவது ஆய்வில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, அப்படி ஏதும் இல்லை என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 6 தாலுகாக்கள் இருக்கின்றன. அந்த 6 தாலுகாக்களுக்கும் இரண்டு ஆதி திராவிட தாசில்தார் அலுவலகங்கள் மட்டும் தான் வுள்ளன. ஆனால் தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த தரையில் ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஒரு ஆதிதிராவிட தாசில்தார் அலு வலகம் உள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 3 தாலுகாக் களுக்கு ஒரு ஆதிதிராவிட நல தாசில்தார் அலுவலகம் இருக் கிறது. அவருக்குக் கூட எந்தவிதமான ஜீப்பும் கொடுக்கப்பட வில்லை. அந்த அலுவலகத்திற்கு அரசு ஊர்தி வழங்கவும், ஒரு தாலுகாவுக்கு ஒரு ஆதிதிராவிட நல தாசில்தார் அலுவலகம் அமைக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1989 ஏப்ரல் 7]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு தனி வினா எழுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. மாரிமுத்து : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதுபோல் தென் ஆற்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி, வானூர் ஆகிய மூன்று வட்டங்களுக்கு என்று ஒரு தனி ஆதிதிராவிட நல அலுவலகம் இருக்கிறது. வானூருக்கு என்று ஒரு தனி வட்டாட்சியர் அலுவலகத்தை அரசு அமைத்து தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, தனி வட்டாட்சியர்கள் எந்தெந்த வட்டங்களில் அதிக வேலை வாய்ப்புகள் இருக்கின்றனவோ, அங்கங்குள்ள மக்களைத் தொடர்பு கொண்டு அந்தந்த வட்டாட்சியர்கள் அந்தப் பணியை செய்துகொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இதுபற்றிய விடைக்கு தனிக் கேள்வி எழுப்பும்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

புதிய கால்நடை மருந்தகம்

43—(*வினா எண் 130) திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆண்டியப்பனூர் அல்லது மாட்டூர் என்னும் இடத்தில் புதிய கால்நடை மருந்தகம் திறக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் புதிதாக இரண்டாகப் பிரிக்கப்பட்டு இருக்கிற ஊராட்சி ஒன்றியம். அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஒரே ஒரு கால்நடை மருந்தகம் இருந்தது. அதுவும் 30 கிலோ மீட்டர் தொலைவிலே இருந்தது. அது இப்போது ஜோலார்பேட்டை ஒன்றியத்திலே போய்விட்ட காரணத்தால், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலே ஆண்டியப்பனூர் என்ற இடத்திலோ அல்லது மிட்டூர் என்ற இடத்திலோ ஒரு கால்நடை மருந்தகம் ஆரம்பிக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS